நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, **L.L.M.,**

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **06-**ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்**.104/2015**

**CNR.No. TNMD16-000335-2015**

…

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக சார்பு ஆய்வாளர்<br>மேலூர் காவல்நிலையம்<br>குற்ற எண்.785/2012 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) கண்ணன், (இறப்பு)<br><br>2) சண்முகபாண்டி,<br>த/பெ.கருப்புச்சாமி<br>நாமலூர், உசிலம்பட்டி விலக்கு, மதகுபட்டி அஞ்சல், சிவகங்கை மாவட்டம்.<br><br>**(**இந்த வழக்கில் **1-**ம் எதிரி கண்ணன் என்பவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே இறந்துவிட்டார்**.** அதனால் அவரைப்பொறுத்து வழக்கு அற்றுப்போக **(Charge abated)** உத்தரவிடப்படுகிறது**.)** |
| குற்றம் முறையிடப்பட்டது | : | 2-ம் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச. |
| குற்றம் வனையப்பட்டது | : | 2-ம் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | A2 Obtained Anticipatory bail in Crl.M.P.No.6751 of 2012, dated 02.11.2012 as per order of the Hon'ble Principal Sessions Judge, Madurai. |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 28.08.2015 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | Nil |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:03 +0530

முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் :

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 03.01.2018 | 22.09.2025 |
| PW2 | 03.01.2018 | 22.09.2025 |
| PW3 | 11.12.2024 | 11.12.2024 |
| PW4 | 11.12.2024 | 11.12.2024 |
| PW5 | 11.12.2024 | 11.12.2024 |
| PW6 | 23.02.2026 | 23.02.2026 |

குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் : 06.03.2026

தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் : Nil

மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் : Nil

தீர்மானம் : 2-ம் எதிரி பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம்.

தீர்ப்பு : முடிவாக, 2-ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 2-ம் எதிரிக்கு அளித்து 2-ம் எதிரி பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழ் குற்றாவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 2-ம் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் 2-ம் எதிரி குவிமுச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:11 +0530

இவ்வழக்கானது கடந்த 31.08.2015-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.04.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பூமிநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை :-</u>

2-ம் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 08.10.2012-ம் தேதி 15.00 மணிக்கு இவ்வழக்கின் வாதி ராஜலெட்சுமி என்பவரை எதிரிகள் இருவரும் சேர்ந்து, வாதி தன் வீட்டின் முன் நின்றுகொண்டு இருந்தபோது வாதியை பார்த்து பொதுவான இடத்தில் என்னடி முண்ட நிலத்தை எங்களுக்கு எழுதி தர மாட்டியா என கெட்ட வார்த்தையில் பேசி தலைமுடியை பிடித்து கீழே இழுத்து போட்டு எதிரிகள் இருவரும் கையால் மாறி மாறி அடித்து வாதியை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர்களாகிறார் என்று மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.104/2015-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் 2-ம் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் 2-ம் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழான 2-ம் எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, 2-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1)-கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 24.02.2017 அன்று 2-ம் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது 2-ம் எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:17 +0530

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.4-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.5-ன் மூலம் அ.சா.ஆ.3-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2-ம் எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் :-**

**4.1)** அ.சா.1 ராஜலெட்சுமி தனது சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் தன் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும், கடந்த 08.10.2012-ம் தேதி பகல் 3 மணியளவில் தங்கள் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருக்கும்பொழுது எதிரிகள் இருவரும் ஏற்கனவே தனது அப்பா தனக்கு கொடுத்த சொத்தை அவர்களுக்கு எழுதித்தருமாறு கேட்டதற்கு தான் மறுத்துவிட்டார் என்றும், அதனால் அவர்கள் தன்னை அசிங்கமாக பேசினார்கள் என்றும், 2-ம் எதிரி சண்முப்பாண்டியன் என்பவர் தன் தலைமுடியை பிடித்து இழுத்து அவர் கையால் தன் முதுகில் அடித்தார் என்றும், அவரிடமிருந்து விலகிச்சென்றபொழுது 1-வது எதிரி தன் கையை இழுத்துப்பிடித்து அவரது கையால் தனது முதுகில் அடித்தார் என்றும், அதை பார்த்த தனது அப்பாவும் அம்மாவும் சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அருகில் குடியிருக்கும் லெட்சுமி என்பவர் அவர்களை விலக்கிவிட்டார் என்றும், அப்போது எதிரிகள் சொத்தை அவர்களது பெயருக்கு எழுதிக்கொடுக்காவிட்டால் தன்னை கொன்றுவிடுவதாக சொல்லிவிட்டு போய்விட்டார்கள் என்றும், பின்னர் காவல்நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 வள்ளியம்மாள் தனது சாட்சியத்தில் எதிரிகள் தனது மகன்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக மாலை சுமார் 5 மணியளவில் அ.சா.1-ன் வீட்டின் முன்பாக ராஜலெட்சுமி நின்றுகொண்டிருந்தபொழுது எதிரிகள் ராஜலெட்சுமியைப்பார்த்து சொத்தை எழுதித்தருமாறு கேட்டு அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரிகள் இருவரும் கையால் அ.சா.1-ன் முதுகிலும், உடம்பிலும் அடித்தார்கள் என்றும், அவர்களை தன்னால் விலக்கிவிடமுடியவில்லை என்றும், தன் மகளை பார்த்து எதிரிகள் சொத்தை நீ அனுபவிக்க முடியாது உன்னை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், பின்னர் அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:21 +0530

**4.3)** அ.சா.3 லெட்சுமி தனது சாட்சியத்தில் பாக்கியம் மனைவி ராஜலெட்சுமியை தனக்கு தெரியாது என்றம், கண்ணன், சண்முகசாமி ஆகியோரை தனக்கு தெரியாது என்றும், கருப்பசாமி மற்றும் அவரது மனைவி வள்ளியம்மையை தெரியுமா என்றால் தெரியாது என்றும், தனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 பெரியசாமி தனது சாட்சியத்தில் பாக்கியம் மனைவி ராஜலெட்சுமியை தனக்கு தெரியாது என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், கருப்பசாமி மற்றும் அவரது மனைவி வள்ளியம்மையை தெரியுமா என்றால் தெரியாது என்றும், தனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள 1-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதிலுள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 ராஜா தனது சாட்சியத்தில் பாக்கியம் மனைவி ராஜலெட்சுமியை தனக்கு தெரியாது என்றும், எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், கருப்பசாமி மற்றும் அவரது மனைவி வள்ளியம்மையை தெரியுமா என்றால் தெரியாது என்றும், தனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், அ.சா.ஆ.3 பார்வை மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதிலுள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6)** அ.சா.6 ராமகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 17.10.2012-ம் தேதி காலை 11.30 மணியளவில் காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜலெட்சுமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.785/2012, இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1)-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே பகல் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான ராஜலெட்சுமி, வள்ளியம்மாள், லெட்சுமி, கருப்புசாமி ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்னி எதிரிகளை 19.10.2012-ம் தேதி காலை 11.00 மணியளவில் மேலூர் செக்கடி அருகே உள்ள ராசு

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:25 +0530

பெட்டிகடை முன்பு வைத்து எதிரி கண்ணன் என்பவரை கைது செய்து பாரா வசம் ஒப்படைத்தார் என்றும், எதிரி சண்முகபாண்டி முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கை கடந்த 05.12.2012-ம் தேதி தனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-**ன் கீழான விசாரணை

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 2-ம் எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 2-ம் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 2-ம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 2-ம் எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்கள்.

**7) 2-**ம் எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு**:**

2-ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 2-ம் எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 2-ம் எதிரிக்கு வழங்கி 2-ம் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:30 +0530

**8)** <u>தீர்வு</u> **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 08.10.2012-ம் தேதி 15.00 மணிக்கு இவ்வழக்கின் வாதி ராஜலெட்சுமி என்பவரை எதிரிகள் இருவரும் சேர்ந்து, வாதி தன் வீட்டின் முன் நின்றுகொண்டு இருந்தபோது வாதியை பார்த்து பொதுவான இடத்தில் என்னடி முண்ட நிலத்தை எங்களுக்கு எழுதி தர மாட்டியா என கெட்ட வார்த்தையில் பேசி தலைமுடியை பிடித்து கீழே இழுத்து போட்டு எதிரிகள் இருவரும் கையால் மாறி மாறி அடித்து வாதியை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்த குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 ராஜலெட்சுமி தனது சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் தன் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும், கடந்த 08.10.2012-ம் தேதி பகல் 3 மணியளவில் தங்கள் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருக்கும்பொழுது எதிரிகள் இருவரும் ஏற்கனவே தனது அப்பா தனக்கு கொடுத்த சொத்தை அவர்களுக்கு எழுதித்தருமாறு கேட்டதற்கு தான் மறுத்துவிட்டார் என்றும், அதனால் அவர்கள் தன்னை அசிங்கமாக பேசினார்கள் என்றும், 2-ம் எதிரி சண்முப்பாண்டியன் என்பவர் தன் தலைமுடியை பிடித்து இழுத்து அவர் கையால் தன் முதுகில் அடித்தார் என்றும், அவரிடமிருந்து விலகிச்சென்றபொழுது 1-வது எதிரி தன் கையை இழுத்துப்பிடித்து அவரது கையால் தனது முதுகில் அடித்தார் என்றும், அதை பார்த்த தனது அப்பாவும் அம்மாவும் சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அருகில் குடியிருக்கும் லெட்சுமி என்பவர் அவர்களை விலக்கிவிட்டார் என்றும், அப்போது எதிரிகள் சொத்தை அவர்களது பெயருக்கு எழுதிக்கொடுக்காவிட்டால் தன்னை கொன்றுவிடுவதாக சொல்லிவிட்டு போய்விட்டார்கள் என்றும், பின்னர் காவல்நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** அ.சா.2 வள்ளியம்மாள் தனது சாட்சியத்தில் எதிரிகள் தனது மகன்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக மாலை சுமார் 5 மணியளவில் அ.சா.1-ன் வீட்டின் முன்பாக ராஜலெட்சுமி நின்றுகொண்டிருந்தபொழுது எதிரிகள் ராஜலெட்சுமியை பார்த்து சொத்தை எழுதித்தருமாறு கேட்டு அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரிகள் இருவரும் கையால் அ.சா.1-ன் முதுகிலும், உடம்பிலும் அடித்தார்கள் என்றும், அவர்களை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:35 +0530

தன்னால் விலக்கிவிடமுடியவில்லை என்றும், தன் மகளை பார்த்து எதிரிகள் சொத்தை நீ அனுபவிக்க முடியாது உன்னை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், பின்னர் அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** அ.சா.1-ன் சாட்சியத்தின் அடிப்படையில் 2-ம் எதிரி அவரை தாக்கினார் என்பதற்கு ஆதரவாக அரசு தரப்பில் அ.சா.1-ன் தாயாரான அ.சா.2-ஐ தவிர எந்தவொரு தனிப்பட்ட சாட்சியங்களும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் அவருக்கு காயம் ஏற்பட்டது என்பதற்கு ஆதரவாக எந்தவொரு மருத்துவ ஆவணங்களும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை தாக்கிய போது அங்கு அ.சா.3 லெட்சுமி இருந்ததாகவும், அவர் சம்பவத்தை பார்த்து விலக்கிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இவ்வழக்கில் அ.சா.3 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளார். எனவே 2-ம் எதிரி அ.சா.1-ஐ அடித்து காயம் ஏற்படுத்தினார் என்று இ.த.ச பிரிவு 323-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13)** அ.சா.6 ராமகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 17.10.2012-ம் தேதி காலை 11.30 மணியளவில் காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜலெட்சுமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.785/2012, இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1)-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே பகல் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான ராஜலெட்சுமி, வள்ளியம்மாள், லெட்சுமி, கருப்புசாமி ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்னி எதிரிகளை 19.10.2012-ம் தேதி காலை 11.00 மணியளவில் மேலூர் செக்கடி அருகே உள்ள ராசு பெட்டிகடை முன்பு வைத்து எதிரி கண்ணன் என்பவரை கைது செய்து பாரா வசம்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:40 +0530

ஒப்படைத்தார் என்றும், எதிரி சண்முகபாண்டி முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யவில்லை என்றும், இவ்வழக்கை கடந்த 05.12.2012-ம் தேதி தனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** பிரிவு 354: பெண்ணின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலான தாக்குதல் அல்லது குற்றமுறை வன்முறை

"354. பெண்ணின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்குடன் அவர் மீது தாக்குதல் நடத்துதல் அல்லது குற்றமுறை வன்முறையைப் பயன்படுத்துதல் எவரொருவர், ஒரு பெண்ணின் கண்ணியத்திற்குப் (Modesty) பங்கம் விளைவிக்கும் நோக்குடன் அல்லது அவ்வாறு செய்வதன் மூலம் அவரது கண்ணியம் பாதிக்கப்படும் என்று தெரிந்தே, அந்தப் பெண்ணைத் தாக்கினாலோ அல்லது குற்றமுறை வன்முறையைப் பயன்படுத்தினாலோ, அவருக்கு ஓராண்டிற்குக் குறையாத, ஆனால் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய ஏதாவதொரு வகையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படுவதுடன், அபராதமும் விதிக்கப்படும்."

**15)** மாண்புமிகு உச்சநீதிமன்றம் ரூபன் தியோல் பஜாஜ் மற்றும் மற்றொருவர் எதிர் கன்வர் பால் சிங் கில் (1995) என்ற முன் தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

*"14. 'கண்ணியம்' (Modesty) என்ற வார்த்தை தண்டனைச் சட்டத்தில் (IPC) வரையறுக்கப்படாததால், அதன் அகராதிப் பொருளை நாம் கவனிக்கலாம். 'ஷார்ட்டர் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியின்படி, கண்ணியம் என்பது அடக்கமான குணம் ஆகும்; ஒரு பெண்ணைப் பொறுத்தவரை அது "பெண்ணிற்குரிய முறையான நடத்தை, எண்ணம், பேச்சு மற்றும் செயலில் பேணப்படும் தூய்மை" என்று பொருள்படும். 'அடக்கமான' (Modest) என்ற வார்த்தை, பெண்ணைப் பொறுத்தவரை "நடத்தை மற்றும் செயலில் கண்ணியமாக இருத்தல்; துணிச்சலான அல்லது காம இச்சையற்ற, நாணமுள்ள"என வரையறுக்கப்படுகிறது."*

*"15. மேற்கூறிய அகராதிப் பொருட்கள் மற்றும் 'மேஜர் சிங்' வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய விளக்கத்தின் அடிப்படையில், ஒரு பெண்ணின் கண்ணியம் பங்கம் விளைவிக்கப்பட்டதா என்பதைக் கண்டறியும் இறுதியான தேர்வு எதுவென்றால், குற்றவாளியின் செயல் ஒரு பெண்ணின் கண்ணிய உணர்வை (Sense of decency) அதிர்ச்சிக்குள்ளாக்கக் கூடியதாக இருக்கிறதா என்பதே ஆகும்."*

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:44 +0530

**16)** மாண்புமிகு உச்சநீதிமன்றம் அட்டர்னி ஜெனரல் எதிர் சதீஷ் மற்றும் மற்றொருவர் (2022) 5 SCC 545 என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

*"66. இவை பெண்கள் மீது உடல் ரீதியான வன்முறையைப் பயன்படுத்துவதைக் கோருகின்றன. 'கண்ணியம்' என்ற சொல் ஒரு வரம்பாக இருந்தது, ஏனெனில் பழைய தீர்ப்புகள் இத்தகைய நிலையை பெண்களின் 'ஒழுக்கமான நடத்தையுடன் தொடர்புபடுத்தின. இது ஆணாதிக்க மற்றும் வர்க்கப் பரிமாணத்தைச் சேர்த்தது. பிரிவு 354 'கண்ணியம்' என்ற சொல்லுக்கு சட்டப்பூர்வ வரையறையை வழங்கவில்லை. காலப்போக்கில், சமூகத்தில் பெண்களின் வளர்ந்து வரும் பங்கிற்கு ஏற்ப, அதன் காலனித்துவ மற்றும் ஆணாதிக்க வேர்களைக் கடந்து இந்தச் சொல் விரிவாக விளக்கப்பட்டது."*

*"இந்த சட்டப் பிரிவுகள் ஒரு காலனித்துவ ஆதிக்கத்தால் இயற்றப்பட்ட சூழலை நாம் மறந்துவிடக் கூடாது. அக்காலத்தில் பெண்களின் சுய அதிகாரம் (Agency) அங்கீ கரிக்கப்படவில்லை அல்லது வரையறுக்கப்பட்ட அங்கீ காரத்தையே கொண்டிருந்தது. மேலும், 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் IPC இயற்றப்பட்ட போது, இந்தியப் பெண்கள் பாரம்பரியமாகத் தந்தை, கணவர் அல்லது பிற ஆண் உறவினர்களின் பராமரிப்பிற்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு அசையாச் சொத்தில் பங்கில்லை; பாலின சமத்துவம் என்ற கருத்துக்கள் கேள்விப்படாதவையாக இருந்தன. பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. இயல்பாகவே, பெண்களின் கண்ணியம் அல்லது அவர்களின் தன்னாட்சி அதிகாரம் (Autonomy) குறித்து அப்போது சட்டத்தில் வழங்கப்படவில்லை."*

*"67. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வருகை இவை அனைத்தையும் குறைந்தபட்சம் சட்ட ரீதியாவாவது புரட்சிகரமாக மாற்றியது. பாலினம், இனம், சாதி, மதம் அல்லது பிராந்தியம் ஆகியவற்றைக் கடந்து, அனைவரும் சட்டத்தின் முன் சமம் மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பை (அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 14) அனுபவிக்கின்றனர். மேலும், பிரிவு 15(1) பாலினம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அரசு பாகுபாடு காட்டுவதைத் தடை செய்கிறது. பிரிவு 15(3) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காகச் சிறப்புச் சட்டங்களை இயற்ற அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது."*

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:49 +0530

**17)** எனவே மேற்கூறிய முன் தீர்ப்புகளின் அடிப்படையில் அ.சா.1, அ.சா.2, அ.சா.6-ன் சாட்சியத்தினை பரிசீலனை செய்தபோது 2-ம் எதிரி அ.சா.1-ஐ பொது இடத்தில் அவரது பெண்மைக்கு இழிவு ஏற்படுத்தினார் என்று இ.த.ச பிரிவு 354-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18)** பொதுவாக ஒரு நபருக்கு எதிராக இதச பிரிவு 294(பி) குற்றச்சாட்டு நிருபிக்கப்படவேண்டுமென்றால், அந்த நபர் பயன்படுத்திய ஆபாசமான வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஒழுக்ககேடான தாக்கங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும் என்றும், அவருக்கு அருவருப்பான எரிச்சலூட்டும் வகையில் அந்த சொற்கள் இருந்திருக்கவேண்டும் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும், **P.T.Chacko Vs Nainan 1967 KLT 799** என்ற வழக்கில் உச்சநீதிமன்றமானது கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

*"To prove the offence under section 294 of IPC mere utternance of obscene words are not suffient but there must be a further proof to establish that it was to b e annonyance of others, it is lacking in this case. No one has spokent about the obscene words, they felt annoyed and in the absence of legal evidence to show that the words uttered by the appellant accused annoyed others, it can not be said the ingriedients of offence u/s.294(b) of IPC is made out".*

**20)** மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் காணும்போது, இந்த வழக்கில் அ.சா.1-ஐ எதிரிகள் அசிங்கமாக பேசி அது மற்றவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையிலும், அருவருக்கத்தக்க வகையிலும் இருந்ததாக இந்த வழக்கின் புகார் மனு உட்பட எந்த சாட்சியத்திலும் காணப்படவில்லை. மேலும், இ.த.ச.பிரிவு 294(b)-ன் படி, 2-ம் எதிரி பொது இடத்தில் வைத்து ஆபாச சொற்களால் அ.சா.1ஐ வசைபாடியிருக்கவேண்டும். ஆனால் இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியத்தின் அடிப்படையில் 2-ம் எதிரி எந்த வார்த்தை பயன்படுத்தி பொது இடத்தில் அ.சா.1-ஐ அசிங்கமாக பேசினார் என்றும், அதனால் யாருக்கு அருவறுப்பு ஏற்பட்டது என்று எந்தவொரு சாட்சியமும் அமையவில்லை. எனவே இ.த.ச பிரிவு 294(பி)-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:53 +0530

**21)** மேலும், 2-ம் எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 506(1)ன் கீழான குற்றச்சாட்டை காணும்போது, சம்பவத்தின்போது 2-ம் எதிரி அ.சா.1-ஐ கொன்றுவிடுவதாக மிரட்டியதாக அரசு தரப்பு வழக்காகும்.

**22**) மேலும், **Manik Taneja Vs State of Karnataka 2015 (7) SCC 423** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றமானது குற்றவியல் மிரட்டல் என்ற பதத்திற்கு கீழ்க்கண்டவாறு பொருள் கண்டுள்ளது.

> *" The threat must be with intention to cause alaram to the complainant to cause that person to do or omit to do any work mere expression of any words without any intention to cause alaram would not be sufficient to bring in the applicaition of section 503 of IPC "*

இந்த வழக்கில் எதிரிகள் அ.சா.1-ஐ கொலை மிரட்டல் விடுத்தார் என்ற வாசகத்தை தவிர அந்த கொலை மிரட்டல் அ.சா.1-க்கு எச்சரிக்கையுடன் கூடிய அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் இருந்தது என்றும், அதன் மூலம் அ.சா.1 மிகுந்த அச்சமடைந்து அவர் செய்யக்கூடிய வேலையை செய்ய தவிர்த்துவிட்டதாக எந்த சாட்சியமும் காணப்படவில்லை. எனவே, எதிரிகள் மிரட்டியதாக சொல்லப்படுவதற்கு பயந்து அ.சா.1 எங்கும் செல்லாமல் அச்சமுற்று இருந்தாக புலப்படவில்லை என்பதால் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. பிரிவு 506(1)-ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**23)** எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பில் 2-ம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை 2-ம் எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**24)** முடிவாக, 2-ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 2-ம் எதிரிக்கு அளித்து 2-ம் எதிரி பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இ.த.ச-ன் கீழ் குற்றாவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 2-ம் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:27:57 +0530

**25)** இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**26)** மேலும் 2-ம் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:28:02 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 03.01.2018 | ராஜலெட்சுமி |
| அ.சா.2 | 03.01.2018 | வள்ளியம்மாள் |
| அ.சா.3 | 11.12.2024 | லெட்சுமி |
| அ.சா.4 | 11.12.2024 | பெரியசாமி |
| அ.சா.5 | 11.12.2024 | ராஜா |
| அ.சா.6 | 23.02.2026 | ராமகிருஷ்ணன் |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.4 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.4-ன் 1-வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.5 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.5-ன் 2-வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | அ.சா.6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | அ.சா.6 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை

**2-**ம் எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் - இல்லை

குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்: இல்லை

குறிப்பு

1) வழக்கு விசாரணைகாலத்தில், 2-ம் எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.06 06:28:07 +0530